# பௌத்த சிங்கள இனவாதத்தின் தோற்றம்

## பகுதி II

3

# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

ஆங்கிலேயர் முதலில் கண்டிக்கு மேலேயுள்ள நுவரெலியா, உடப்புசல்லாவ, தலவாகெலை ஹற்றன் பகுதிகளிலுள்ள பெருங் காடுகளை அழித்தே தமது பாரிய தேயிலைத் தோட்டங்களை நிர்மாணித்தனர். இப் பாரிய நிலப்பரப்பு முன்பு கண்டிய மன்னனுக்கு மட்டுமே சொந்தமாக இருந்தது. ஆனால் மன்னனோ; அவனது பிரதானிகளோ இந்த நிலத்தை தங்களது உபயோகத்துக்குப் பயன்படுத்தியதே கிடையாது. அவர்களது காலடிகள் கூட இந்த நிலத்தில் பட்டிருக்க முடியாத அளவுக்கு அப்பிரதேசம் பாதைகளற்ற அடர்ந்த காடாக இருந்தது.

ஆங்கிலேயர்கள், தமிழ்த் தொழிலாளர்களைக் கொண்டு இந்தக் காடுகளை அழித்து தேயிலைத் தோட்டங்களை உருவாக்கிய அதேநேரம், கொழும்புடன் இப்பகுதிகளைத் தொடர்பு படுத்துவதற்கான நெடுஞ்சாலைகளையும், புகையிரதப் பாதைகளையும் கூட அமைத்தனர். புகையிரதப் பாதைகளை அமைப்பதற்கு கேரளாவிலிருந்த மலையாளத் தொழிலாளர்களையும், தமிழகத் தொழிலாளர்களை அழைத்து வந்தது போல் அழைத்து வந்திருந்தனர்.

மலையகத்திலுள்ள புகையிரதப் பாதையில் இருக்கும் ஒவ்வொரு சிலிப்பர் கட்டையும் ஒவ்வொரு இந்தியத் தொழிலாளியின் உயிர் என்று சொல்லுமளவுக்கு இந்தப் பாதைகளை அமைப்பதில் அதிக கஷ்டங்களையும், உயிரிழப்புக்களையும் இந்தியத் தொழிலாளர்கள் சந்தித்திருந்தனர்.

மலையகத்தில் பயிரிடப்பட்ட ஒவ்வொரு தேயிலைச் செடியும், ஒவ்வொரு தொழிலாளியின், உடலை உரமாகக் கொண்டு வளர்ந்தது என சொல்லுமளவுக்கு தமிழகத் தொழிலாளர்கள் தங்கள் உயிரைக் கொடுத்து அந்தத் தேயிலைத் தோட்டங்களை உருவாக்கினர்.

முதற் கட்டமாகச் செய்யப்பட்ட தேயிலைச் செய்கை பாரிய வெற்றியளித்து அதிக இலாபத்தை ஈட்டித்தந்ததால், அதை அடுத்த கட்டத்துக்கு இன்னும் பெரிதாக விஸ்தரிக்கத் திட்டமிடப்பட்டது.

அதே நேரம் அந்தக் கால கட்டத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட அபரீதமான கைத்தொழில் வளர்ச்சியானது இறப்பரின் தேவையை முதன்மைப்படுத்தியிருந்தது. ஏற்கனவே கண்டிப் பகுதியில் பரீட்சார்த்தமான முறையில் செய்து பார்க்கப்பட்ட இறப்பர் மரநடுகை வெற்றியளித்ததால் தேயிலையைப் போல் இறப்பர் தோட்டங்களையும் பாரிய அளவில் நிர்மாணிக்க ஆங்கிலேயர்கள் திட்டமிட்டனர்.

ஏற்கனவே மலை முகடுகளிலிருந்த காடுகளை அழித்ததால், மழைவீழ்ச்சிக்குறைவு, மண்ணரிப்பு, மண்சரிவு முதலான இயற்கைப் பாதிப்புக்கள் ஏற்படத் தொடங்கியிருந்தன. இதனால் இரண்டாம் கட்ட பெருந்தோட்ட விஸ்தரிப்புக்கு காடுகளை அழிப்பதை விடுத்து 1840 இல் கொண்டுவரப்பட்ட தரிசு நிலச் சட்டத்தின் மூலம் கண்டிய விவசாயிகளிடமிருந்து பறித் தெடுக்கப்பட்ட நிலங்களை ஆங்கிலேயர்கள் பயன்படுத்திக் கொண்டனர்.

**கண்டிய சிங்கள நிலப்பிரபுக்கள், வெள்ளை எசமானர்களிடம் கைக்கூலி பெற்றுக் கொண்டு அப்பாவி சிங்கள விவசாயிகளினது நிலங்களை பறித்தெடுக்க உதவிய துரோகத்தனம் இன்று மறைக்கப்படுகிறது. இவர்கள், படிப்பறிவில்லாத சிங்கள விவசாயிகளை ஏமாற்றியும், பயமுறுத்தியும், ஒரு ஏக்கர் நிலத்தை 50 சதத்திற்கு வெள்ளைத்துரைமாருக்கு வாங்கிக் கொடுத்துள்ளனர்.**

இன்று கண்டிய விவசாயிகளின் நிலங்கள் பறிபோவதற்கு அப்பாவி மலையகத் தோட்டத் தொழிலாளர்களே காரணம் எனக்கூச்சல் போடும் பௌத்த சிங்கள இனவாதிகள், தங்களது முன்னோர்களான கண்டிய சிங்கள நிலப்பிரபுக்கள் சிலரும், அதற்குக் காரணமாக இருந்திருக்கிறார்கள் என்பதை வெளியில் சொல்வதேயில்லை.

கண்டிய சிங்கள நிலப்பிரபுக்கள், வெள்ளை எசமானர்களிடம் கைக்கூலி பெற்றுக் கொண்டு அப்பாவி சிங்கள விவசாயிகளினது நிலங்களை பறித்தெடுக்க உதவிய துரோகத்தனம் இன்று மறைக்கப்படுகிறது. இந்த நிலப்பிரபுக்கள், படிப்பறிவில்லாத சிங்கள விவசாயிகளை ஏமாற்றியும், பயமுறுத்தியும், ஒரு ஏக்கர் நிலத்தை 50 சதத்திற்கு வெள்ளைத்துரைமாருக்கு வாங்கிக் கொடுத்துள்ளனர்.

கண்டிய விவசாயிகளின் நிலங்களைப் பறிக்கும் வேலையை நடைமுறைப்படுத்திய பிரித்தானிய கவனர் கிளிபோட், “கிராமவாசிகளிடமிருந்து சரியான உறுதிகளற்ற நிலங்களை வாங்கும் வேலை அநேகமாக, அவர்களுடைய நாட்டவர்களால்தான் செய்யப்பட்டது” என்று தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றைவிட 1856-ல் கொண்டுவரப்பட்ட 10 இலக்க கோவில் நிலப்பதிவுச் சட்டத்தின் கீழும், கண்டிய விவசாயிகளின் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. கண்டியிலிருந்த பௌத்தர்களின் புனித தலமான தலதாமாளிகைக்கும், ஏனைய பிற பௌத்த விகாரைகளுக்கும், பெருமளவு விவசாய நிலங்கள் சொந்தமாக இருந்தன. இந்த நிலங்களை சிங்கள விவசாயிகள் குத்தகை அடிப்படையில் எடுத்து விவசாயம் செய்து வந்தனர்.

1840-ல் தரிசு நிலச் சட்டங் கொண்டு வரப்பட்டபோது, இந்த நிலங்களை தரிசு நிலங்களாகக் கணக்கிட்டு ஆங்கிலேயர்களால் கைப்பற்ற முடியவில்லை. இந்த நிலங்களின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு பௌத்த விகாரைகளுக்கு கண்டிய மன்னர்கள் வழங்கிய சாசனங்கள் இருந்தன.

ஆனால் 1856-ல் கோவில் நிலப்பதிவுச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது, கோவில் நிலங்கள் அரசுக்குச் சொந்தமாகின. அந்த நிலத்தில் விவசாயம் செய்து வந்த விவசாயிகள், வெறும் வாய்மொழி மூலம் உத்தரவாதத்தின் அடிப்படையிலேயே பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்துவந்தனர். அவர்களிடம் தங்களது குத்தகை உரிமையை நிரூபிக்க எந்த ஆவணமும் இருக்கவில்லை. இதை கண்டிய நிலப்பிரபுக்கள் மூலம் நன்கு தெரிந்து கொண்ட ஆங்கிலேயர்கள், ஒரே ஒரு சட்டத்தின் மூலம் அவர்களை சுலபமாக அவர்கள் விவசாய நிலங்களிலிருந்து வெளியேற்றி விட்டனர்.

இவ்வாறு வெளியேற்றப்பட்ட சிங்கள விவசாயிகள் ஆங்கிலேய ஆட்சிமீதும், அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் கரையோரச் சிங்களவர்கள் மீதும், தீராத வெறுப்புக் கொண்டனர். அக்கால கட்டத்தில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் வாழ்வைக் கெடுத்துவிட்டதாக அவர்கள் நினைக்கவில்லை. அதற்குக் காரணம் ஆங்கிலேய எசமான்களின் கீழ் கூலிகளாக வேலைசெய்ய அவர்கள் விரும்பாததேயாகும்.

ஆங்கிலேய நிர்வாகமும், அவர்கள் எப்போதும் தமக்கு ஆபத்தானவர்கள் எனக் கருதி, அவர்களை மேலும் நசுக்கி அழிப்பதற்காக 1888-ம் ஆண்டு தானிய வரிச்சட்டம் ஒன்றைக் கொண்டுவந்தது.

கண்டியிலிருந்து வெளியேறி கீழ் பிரதேசங்களிலுள்ள நிலப்பிரபுக்களின் நிலங்களில் குத்தகைக்கு விவசாயம் செய்துவந்த விவசாயிகளுக்கு இந்தவரி ஒரு மரண வரியாகவே இருந்தது. ஆங்கிலேயரின் அனுசரணை பெற்ற சிங்கள நிலப்பிரபுக்கள் தங்கள் நிலத்தில் விளையும் விளைச்சலுக்கு தாங்கள் செலுத்த வேண்டிய வரியை, குத்தகைக்கு விவசாயம் செய்த விவசாயிகள் மீதே சுமத்தினர். இதனால் குத்தகைக்கும், தானியவரிக்கும் நிலத்தில் விளைந்த விளைச்சல் சரியாகப் போய் விட அவர் பட்டினி கிடக்க வேண்டி ஏற்பட்டது.

தோட்டத் தொழிலாளர்களின் வருகையோடு, இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்திருந்த, வட்டித் தொழில் செய்யும் மார்வாடிகள், மற்றும் வியாபாரிகள், அந்த விவசாயிகளின் அற்ப சொற்ப சொத்துக்களையும் வட்டிக்குப் பணம் கொடுத்தும், அறாவிலைக்கு உணவுப் பொருட்களைக் கொடுத்தும், கைப்பற்றிக் கொண்டுவிட இயல்பாகவே அங்கு இந்திய எதிர்ப்புணர்வு அவர்களிடம் உருவாகியது.

இந்தக் காலகட்டத்தில் கரையோரச் சிங்களப் பகுதிகளில் சாராயத் தவறணைகளை இலங்கையர்களுக்கு குத்தகைக்கு விடும் முறையை ஆங்கிலேயர்கள் அமுல் படுத்தினர். கிராமங்கள், நகரங்கள், தோறும் திறக்கப்பட்ட சாராயம் மற்றும் கள்ளுத் தவறணைகளை கிறிஸ்தவ மதத்திற்கு மதம் மாறிய கரையோரச் சிங்களவர்கள் பலர் குத்தகைக்கு எடுத்ததன் மூலம் புதுப் பணக்காரர்கள் ஆகினார்கள்.

தீவிர பௌத்த மதக் கோட்பாட்டாளர்களுக்கு கிறிஸ்தவ மதப் பரப்பல், கிறிஸ்தவப் பாடசாலைகள் என்பன ஏற்படுத்திய தாக்கத்தை விட சாராயம் மற்றும் கள்ளு வியாபாரம் 'பௌத்த சங்கத்தின்' ஒழுக்கத்தை சீர் குலைக்கும் விடயமாக இருந்தால், அவர்கள் முதலில் அதற்கெதிராக மது ஒழிப்பு இயக்கம் ஒன்றை ஆரம்பித்தனர்.

இந்த மது ஒழிப்பு இயக்கம் தமது ஆட்சியின் நலனுக்கு எதிரான அரசியல் அம்சத்தை உள்ளடக்கியிருப்பதாகக் கருதிய ஆங்கிலேயர்கள், தமது கைக் கூலிகளை அதற்குள் ஊடுருவ விட்டு அதை பௌத்த இனவாத இயக்கமாக மாற்ற முயற்சித்தனர். அதாவது மத ஒழிப்பு இயக்கம், வளர்ச்சியடைந்து பாரிய அரசியல் இயக்கமாக மாறும் போது, இலங்கையில் இருந்த எல்லா இனப்பிரிவுகளையும் சேர்ந்த மது ஒழிப்பு



இயக்கங்களை ஒன்று படுத்தி விடுவதோடு இந்தியாவில் ஏற்கனவே உருவாகி இருந்த இந்துத்துவ மது ஒழிப்பு இயக்கங்களோடு, அவை தொடர்பு கொண்டு தமது எல்லையை விரிவுபடுத்திவிடும் என்று அவர்கள் அஞ்சினார்கள்.

**- நக்கீரன்**